இந்தக் கூட்டத்தில் ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் சரஸ்வதி செல்வசங்கர், ராமையன்பட்டி முத்துக்குமார், ராஜவல்லிபுரம் பேச்சியம்மாள், கீழப்பாட்டம் திருப்பதி, செட்டிக்குளம் தெய்வானை, நொச்சிக்குளம் ராமலட்சுமிமுருகன், பொன்னாக்குடி நம்பிராஜன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

சீவலப்பேரியில் கண்காணிப்பை பலப்படுத்தக் கோரி மனு



திருநெல்வேலி ஆட்சியரை சந்தித்த யாதவ மகா சபையினா்.

திருநெல்வேலி, நவ. 17: சீவலப்பேரியில் கண்காணிப்பை பலப்படுத்த வேண்டும் என யாதவ மகா சபையினர் ஆட்சியரிடம் வியாழக்கிழமை மனு அளித்தனர்.

இதுகுறித்து, அந்த அமைப்பின் மாவட்டத்த லைவர் ராமகிருஷ்ணன் கூறியது: திருநெல்வேலி சீவலப்பேரியில் விவசாயி கொலைச் சம்பத்தில் ஈடுபட்ட கூலிப்படையினரை போலீஸார் கைது செய்துள்ளனர். அவர்களை இயக்கியவர்களையும் கைது செய்யவேண்டும். சீவலப்பேரி பகுதியில் 24 மணி நேரமும் போலீஸார் ரோந்துப் பணியில் ஈடுபடவேண்டும். அதை அதிகாரிகள் கண்காணிக்கவேண்டும். கண்காணிப்பு கேமரா விரைவில் அமைக்க வேண்டும் என மனுவில் வலியுறுத்தியுள்ளோம் என்றார் .

மனுஅளிக்கும் நிகழ்வில் யாதவர் மகாசபை அவைத்தலைவர் மூக்காண்டி, மாவட்டச்செயலர் வள்ளிநாயகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஓய்வுபெற்ற எஸ்.ஐ. வீட்டில் நகை திருட்டு

திருநெல்வேலி, நவ. 17: பாளையங்கோட்டைகக்கன்நகரில்ஓய்வுபெற்ற காவல் உதவி ஆய்வாளர் வீட்டில் நகையைத் திருடிச் சென்றவர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

கக்கன்நகரைச் சேர்ந்தவர் பேச்சிமுத்து (65). ஓய்வுபெற்ற காவல் உதவி ஆய்வாளர். தனது மகள் சித்ரா வீட்டில் முதல் தளத்தில் வசித்து வரும் இவர், கடந்த 13 ஆம் தேதி குடும்பத்துடன் திருப்பதி கோயிலுக்கு சென்றிருந்தார். பின்னர், வியாழக்கிழமை வீட்டுக்கு திரும்பி வந்தபோது, கதவு திறக்கப்பட்டிருந்ததாம். மேலும், பீரோவில் இருந்த 3 கிராம் தங்கமோதிரம், 2 வெள்ளி கொலுசுகள், 50 கிராம் வெள்ளி பொருள்களை மர்மநபர்கள் திருடிச்சென்றது தெரியவந்தது. பாளையங்கோட்டை போலீஸார் வழக்குப்பதிந்து விசாரிக்கின்றனர்.

பேட்டரி திருட்டு: பாளையங்கோட்டையைச் சேர்ந்தவர் சேகர் (60). இட்டேரி பகுதியிலுள்ள தனியார் கைப்பேசி நிறுவன கோபுரங்களை கண்காணிக்கும் அலுவலராக பணியாற்றி வருகிறார். வியாழக்கிழமை அதிகாலை இட்டேரி கைப்பேசி கோபுரத்திலிருந்து சென்சார் மூலம் அவரது கைப்பேசிக்கு எச்சரிக்கை தகவல் வந்ததாம்.

அவர், அங்கு சென்று பார்த்த போது, இளைஞர் ஒருவர் கைப்பேசி கோபுரத்தில் பேட்டரியை திருட முயன்றதும், பின்னர் அங்கேயே தூங்கி விட்டதும் தெரியவந்தது. அவரைப் பிடித்து, முன்னீர்பள்ளம் காவல்நிலையத்தில் ஒப்படைத்தார். விசாரணையில், அவர் கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த குமார் (24) என்பது தெரியவந்தது. இதையடுத்து அவரை போலீஸார் கைது செய்தனர்.

நெல்லையில் தொழில்நுட்பத் துறை போட்டிகள்

மாணவர்கள் ஆர்வம்



திருநெல்வேலியில் வியாழக்கிழமை நடைபெற்ற ஹேக்கத்தான் போட்டி தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்றோா்.

திருநெல்வேலி, நவ. 17: திருநெல்வேலி மாவட்ட நிர்வாகம் , தமிழ்நாடு புத்தொழில் - புத்தாக்க இயக்கம் சார்பில் தகவல் தொழில்நுட்பத்துறையின் மூலம் புதிய தீர்வுகளை உருவாக்கும் போட்டி (ஹேக்கத்தான் போட்டி) வியாழக்கிழமை நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற போட்டியை ஆட்சியர் வே.விஷ்ணு தொடங்கி வைத்தார். துணை ஆட்சியர் (பயிற்சி) எஸ். கோகுல் முன்னிலை வகித்தார். திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த பொறியியல் மாணவர்களுக்கு முதலில் தகவல் தொழில் நுட்பத் துறையின் புதிய போக்குகள், யோசனைகள், தந்திரங்கள் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது.

பின்னர் நடைபெற்ற போட்டியில் பங்கேற்க விண்ணப்பித்திருந்த 600-க்கும் மேற்பட்ட மாணவர்களில் சுமார் 150 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு சமூக நலன் மேம்பாடு தலைப்புகளில் மக்களுக்கு பயன்படும் தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளை உருவாக்க அறிவுறுத்தப்பட்டது. மாணவர்களுக்கு உதவுவதற்கும், சந்தேகங்களைத் தீர்ப்பதற்கும் 10-க்கும் மேற்பட்ட ஆலோசகர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆலோசனை வழங்கினர்.

போட்டியில்சிறப்பிடம்பெறும் தலைசிறந்த இரண்டு புத்தாக்கங்களை தேர்வு செய்து அவர்களுக்கு காசோலை, கூகுள் பெங்களூரு நிறுவனத்தில் மூன்று நாள் சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்பட உள்ளது. மேலும், சிறந்த ஐந்து அணிகளுக்கு திருநெல்வேலியில் நடைபெறவிருக்கும் டெக்ஸ்டார்ஸ் ஸ்டார்ட் அப் வீக்என்ட் என்ற பன்னாட்டுப் போட்டியில் நுழைவு கட்டணமின்றி பங்கேற்க வாய்ப்பளிக்கப்படும்.

போட்டி தொடக்க நிகழ்ச்சியில் சிறப்பு வருவாய் அலுவலர் மா. சுகன்யா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப மைய இயக்குநர் ஆறுமுகநயினார், நான் முதல்வன் திட்ட இணையதள வடிவமைப்பாளர் விக்னேஷ் அண்ணாமலை, செந்தில் குமார், ஸ்டார்ட்டப் டி என் மண்டல மேலாளர் ராகுல், வரதராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ராமையன்பட்டி அருகே விபத்தில் காயமுற்றவர் பலி

திருநெல்வேலி, நவ. 17: ராமையன்பட்டி அருகே நேரிட்ட விபத்தில் காயமடைந்த இளைஞர் புதன்கிழமை இரவு உயிரிழந்தார்.

ராமையன்பட்டி சிவாஜிநகரைச் சேர்ந்த முத்தையா மகன் சுரேஷ் (28). இவர், மருந்துகள் விற்பனை நிறுவனத்தில் ஊழியராகப் பணியாற்றி வந்தார். கடந்த 13 ஆம் தேதி கம்மாளங்குளத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்றுவிட்டு தனது மோட்டார் சைக்கிளில் வீட்டிற்கு மீண்டும் சென்று கொண்டிருந்தார். அப்போது, அடையாளம் தெரியாத வாகனமும், அவரது மோட்டார் சைக்கிளும் எதிர்பாராமல் மோதிக்கொண்டனவாம். இதில் பலத்த காயமடைந்த அவர் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், புதன்கிழமை இரவு உயிரிழந்தார்.

மற்றொரு சம்பவம்: மேலப்பாளையம் பஷீரப்பா தெருவைச் சேர்ந்தவர் காஜாமசூது (29). தனியார் உணவக ஊழியர். இவர், கடந்த 13 ஆம் தேதி தனது மோட்டார் சைக்கிளில் மேலப்பாளையம் அருகே சென்று கொண்டிருந்தபோது, மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதாம். இதில், அவரும், எதிர் மோட்டார் சைக்கிளில் வந்த கொட்டிகுளம் கடைவீதியைச் சேர்ந்த உச்சிமாகாளி, ஹரிஹரசுதன் ஆகியோரும் காயமடைந்தனர்.

இதையடுத்து திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மூவரில், காஜாமசூது வியாழக்கிழமை உயிரிழந்தார். இச்சம்பவங்கள் குறித்து மானூர், திருநெல்வேலி மாநகர போக்குவரத்துப் புலனாய்வுப் பிரிவு போலீஸார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர்.

கால்நடை மருத்துவ முகாம்



கால்நடை மருத்துவ முகாமில் பங்கேற்றோா்.

திருநெல்வேலி, நவ. 17: மானூர் ஊராட்சி ஒன்றியம், பேட்டை ரூரல் ஊராட்சியில் தமிழக முதல்வரின் சிறப்பு கால்நடை சுகாதார - விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

பேட்டை ரூரல் ஊராட்சித் தலைவர் சின்னத்துரை முன்னிலை வகித்தார். கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பொன்னுவேல் வரவேற்றார். ஊராட்சி துணைத் தலைவர் சுப்புலட்சுமி வாழ்த்திப் பேசினார். மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை துணை இயக்குநர் தியோபிலஸ் ரோஜர், உதவி இயக்குநர் கலையரசி, நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் ஜாண்சுபாஷ் ஆகியோர் தொழில்நுட்ப உரையாற்றினர். சென்னை முதன்மை நோய் நிகழ்வியல் அலுவலர் சத்யநாராயணன் முகாமை தொடங்கி வைத்தார். ஆடு, மாடு, கோழி ஆகியவற்றிற்கு தடுப்பூசிகளும், சத்து மாவும் வழங்கப்பட்டன. மாடுகளுக்கு சினை ஊசியும் செலுத்தப்பட்டது. கால்நடை உதவி மருத்துவர் ரேவதி நன்றி கூறினார்.

குற்றாலத்தில் குவிந்த ஐயப்ப பக்தர்கள்



குற்றாலம் பேரருவியில் குளித்த ஐயப்ப பக்தா்கள்.

தென்காசி, நவ. 17: தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் வியாழக்கிழமை புனித நீராடி மாலை அணிந்து விரதம் தொடங்கினர்.

குற்றாலத்தில் வியாழக்கிழமை அதிகாலை அதிகளவில் ஐயப்ப பக்தர்கள் குவிந்தனர். பேரருவியில் பக்தர்கள் ஓரமாக நின்று குளிக்க அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் புனித நீராடி, விநாயகர் கோயில், குற்றாலநாதர் கோயிலில் மாலை அணிந்து விரதம் தொடங்கினர்.

நெல்லை சுற்றுவட்டாரத்தில் நாளை மின்சாரம் நிறுத்தம்

திருநெல்வேலி, நவ.17: மின்நிலைய பராமரிப்புப் பணிகளுக்காக திருநெல்வேலி சுற்றுப்புற கிராமங்களில் சனிக்கிழமை மின்தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி,மேலக்கல்லூர், நடுக்கல்லூர், பொழிக்கரை, சங்கன் திரடு, சுத்தமல்லி, கொண்டாநகரம், பழவூர், கருங்காடு, திருப்பணி கரிசல்குளம், துலுக்கர்குளம், வெள்ளாளன்குளம் சுற்றுப்புற பகுதிகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது என கல்லிடைக்குறிச்சி கோட்ட செயற்பொறியாளர் எம்.சுடலையாடும் பெருமாள் தெரிவித்துள்ளார்

மூலக்கரைப்பட்டி, பருத்திப்பாடு, புதுக்குறிச்சி, மருதகுளம், கோவைகுளம், முனைஞ்சிப்பட்டி, தாமரைச்செல்வி, காடன்குளம், வன்னிக்கோனேந்தல், மூவிருந்தாளி, தேவர்குளம், முத்தம்மாள்புரம், கண்ணாடிகுளம், மருக்காலங்குளம், தெற்கு பனவடலி, நரிக்குடி, சீவலப்பேரி, கங்கைகொண்டான், பாலாமடை, பதினாலாம்பேரி, குப்பக்குறிச்சி, பருத்திகுளம், துறையூர், ராஜபதி, வெங்கடாசலபுரம், ஆலடிப்பட்டி, அளவந்தான்குளம், செழியநல்லூர், சிங்கநேரி, அம்பலம், திடியூர், மூன்றடைப்பு, பானான்குளம், அம்பூர்ணி, தோட்டாக்குடி, பத்தினிப்பாறை சுற்றுவட்டாரங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது திருநெல்வேலி கிராமப்புற செயற்பொறியாளர் ஜான் பிரிட்டோ தெரிவித்துள்ளார்.

'போட்டித் தேர்வுக்கு இலவசப் பயிற்சி: மீனவ இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம்'

திருநெல்வேலி, நவ.17: மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர்கள் இந்திய குடிமைப் பணிகளில் சேருவதற்கான போட்டித் தேர்வுக்கு இலவச பயிற்சி அளிக்கப்படுவதால் விண்ணப்பிக்கலாம்.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் வே.விஷ்ணு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர்கள் இந்திய குடிமைப் பணிகளில் சேருவதற்கான போட்டித் தேர்வுக்கு இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. பயனாளி மீனவ சமுதாயத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும். பெற்றோர், பாதுகாப்பாளர் மீனவ கூட்டுறவு சங்கம், மீனவர் நல வாரியத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும். வயது 1.8.2023-இல் 21 முதல் 32 வயதுக்குள் இருக்க வேண்டும். பிற்படுத்தப்பட்டவராக இருந்தால் 35 வயது வரையிலும், ஆதிதிராவிடர், பழங்குடியினராக இருந்தால் 42 வயது வரையிலும் இருக்கலாம். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இளநிலை பட்டப்படிப்பு பயின்றிருக்க வேண்டும். பன்னிரெண்டாம் வகுப்பில் 80 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். படிப்பு முடித்து வேறு பணிகளில் இருந்தாலும் தகுதியிருப்பின் இந்தப் பயிற்சியில் சேரலாம். விண்ணப்ப படிவங்களை www.fisheries.tn.gov.in<http://www.fisheries.tn.gov.in என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அந்தந்த மாவட்ட மீன்வளம் - மீனவர் உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகலாம்.

மீலாது நபி சிறப்புச் சொற்பொழிவு



சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில் நடைபெற்ற சொற்பொழிவில் பங்கேற்றோா்.

திருநெல்வேலி, நவ. 17: பாளையங்கோட்டை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில் மீலாது நபி சிறப்புச் சொற்பொழிவு வியாழக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் செ.மு. அப்துல் காதர் தலைமை வகித்தார். துணை முதல்வர் எஸ்.எம்.ஏ. செய்யது முகம்மது காஜா, ஆட்சிக் குழு உறுப்பினர் எல்.கே.எம்.ஏ. முகம்மது நவாப் ஹுசேன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரபித் துறைத் தலைவர் ஜெ. உபைதுல்லாஹ் வரவேற்றார். உஸ்மானிய்யா அரபிக்கல்லூரி முதல்வர் எஸ்.எஸ்.ஏ. ஹைதர் அலி மிஸ்பாஹி சிறப்புரையாற்றினார். எம். அபுல் ஹசன் நன்றி கூறினார்.

பாளை.யில் ஓய்வுபெற்ற எஸ்ஐ தற்கொலை

திருநெல்வேலி, நவ. 17 : பாளையங்கோட்டையில் ஓய்வுபெற்ற காவல் உதவி ஆய்வாளர் வியாழக்கிழமை தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

பாளையங்கோட்டை, கால்டுவெல் காலனியை சேர்ந்தவர் வேல்முருகன் (61). இவர் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். இந்த நிலையில் இவர் பாளையங்கோட்டை, கோட்டூர்புரம் சாலையிலுள்ள விநாயகர் கோயில் அருகேயுள்ள கட்டடத்தில் தூக்கிட்டு இறந்த நிலையில் கிடந்தார். இது குறித்த தகவலின்பேரில், பாளையங்கோட்டை போலீஸார் அவரது சடலத்தைக் கைப்பற்றி வழக்குப்பதிந்து விசாரிக்கின்றனர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

திருநெல்வேலி

வஉசி நினைவு தினம்: வஉசி மணிமண்டபம், பங்கேற்பு- மேயர் பி.எம்.சரவணன், திருநெல்வேலி நகரம், காலை 9.30.

விநாடி- வினா: மதிதா இந்துக் கல்லூரி மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி சந்திப்பு, முற்பகல் 11 மணி.

M/s. PALLADAM COIR GROWBAG CLUSTER
(Implementing Agency, Palladam Coir Cluster)
Office: No. 85/2, Puliyamapatti Village, Karadivavi (Via), Palladam Taluk, Tiruppur District - 641 658
Mobile: +91-9894019019, Email : cde.palladamcoircluster.com

TENDER NOTICE No. SFURTI-I/TN-PALLADAM/UGT-001/2022-23 dt.18.11.2022

For and on behalf of **M/s.Palladam Coir Grow Bag Cluster**, sealed tenders are invited from reputed civil contractors for the construction of underground water tanks and bunker unit for the Common Facility Center of Palladam Coir Cluster, Tiruppur under the "Scheme of Fund for Regeneration of Traditional Industries (SFURTI)", supported by Ministry of MSME, Government of India. Coir Board, Kochi is the Nodal Agency for the cluster development under the scheme.

The tender schedule can be downloaded at free of cost from the website of **www.coirboard.gov.in** or **www.itcot.com** upto 5.00 PM on 08.12.2022.

The last date for submission of tenders is upto 2.00 PM on 09.12.2022 and the same will be opened on the same day at 03.00 PM. The tender document shall be submitted at the office of Regional Office Coir Board, No.41, Nehru Street, Mahalingapuram, Near Roundana, Beside Water Tank, Pollachi – 642002, Tamilnadu.

President
Palladam Coir Growbag Cluster

SHRIRAM A WINNING RELATIONSHIP
ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
பெருநிறுவன அடையாள எண் (CIN): L65191TN1979PLC007874
பதிவு அலுவலகம்: ஸ்ரீ டவர்ஸ், 14A, தெற்குக் கட்டம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-600 032, தமிழ்நாடு, இந்தியா.
தொ.பே.எண்: +91 44 4852 4666, தொலைநகல்: +91 44 4852 5666.
இணையத்தளம்: www.stfc.in மின்னஞ்சல்: secretarial@stfc.in

ஸ்ரீராம் சிட்டி யூனியன் ஃபைனான்ஸ் லிமிடெட் ("SCUF") நிறுவனத்தின் சரிவிகிதப் பங்குதாரர்களையும் மாற்ற இயலாத கடனீட்டு ஆவண (NCD) உரிமையாளர்களையும் ஸ்ரீராம் கேப்பிட்டல் லிமிடெட் ("SCL") நிறுவனத்தின் சரிவிகிதப் பங்குதாரர்களையும் தீர்மானிப்பதற்கான பதிவு நாள்

இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், SCL நிறுவனத்தால் கையகப்படுத்தப்பட உள்ள SCUF நிறுவனம் மற்றும் பிற நிறுவனங்களின் ஏற்பாடு மற்றும் ஒருங்கிணைப்புக்கான கூட்டுத் திட்டத்துக்கு ("திட்டம்") ஒப்புதலளிக்கும் பொருட்டு மாண்பமை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தால் வெளியிடப்பட்ட நவம்பர் 14, 2022 நாளிட்ட பொது உத்தரவை அடுத்து நிறுவனத்தின் சரிவிகிதப் பங்குகள் மற்றும் மாற்ற இயலாத கடனீட்டு ஆவண ("NCD") உரிமையாளர்களான SCUF நிறுவனத்தின் சரிவிகிதப் பங்குதாரர்களையும் NCD உரிமையாளர்களையும் SCL நிறுவனத்தின் சரிவிகிதப் பங்குதாரர்களையும் தீர்மானிப்பதற்காக நவம்பர் **30, 2022** - புதன்கிழமை பதிவு நாளாக ("பதிவு நாள்") முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், சட்டப்படியும் திட்டத்தின் பிரிவு III, உட்கூறு எண் 4.3-இன் கீழுமான கட்டுப்பாட்டின்படி இனி வெளியிடப்பட உள்ளவையும் SCUF மற்றும் SCL நிறுவனப் பங்குதாரர்களுக்கு ஒதுக்கப்பட உள்ளவையுமான சரிவிகிதப் பங்குகள் மின்னணு முறைக்கு மாற்றப்பட்டவையாக (dematerialized form) மட்டுமே இருக்கும். எனவே SCUF நிறுவனப் பங்குதாரர்கள் அச்சு வடிவிலான தங்களுடைய பங்குகளைப் பதிவு நாளன்றோ அதற்கு முன்னரோ மின்னணு முறைக்கு மாற்றிக் கொள்ளுமாறு அறிவுறுத்துகிறோம். பங்குதாரர்களில் யாராவது தங்கள் மின்னணுக் கணக்கு (demat account) விவரங்களைப் பதிவு நாளுக்குள் நிறுவனத்துக்குத் தெரிவிக்கத் தவறினால் அன்னாருக்கு நிறுவனத்தால் வெளியிடப்படும் சரிவிகிதப் பங்குகள் இடைவைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு உரிய விவரங்கள் வரப்பெற்ற பின்னர் தொடர்புடைய பங்குதாரரின் மின்னணுக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

பதிவு நாள் அறிவிப்பு நிறுவனத்தின் **www.stfc.in** இணையத்தளத்திலும் பங்குச் சந்தை இணையத்தளங்களான BSE லிமிடெடின் **www.bseindia.com** மற்றும் இந்திய தேசியப் பங்குச் சந்தைக் கழகத்தின் **www.nseindia.com** ஆகியவற்றிலும் வெளியிடப்பட்டுள்ளன.

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் சார்பில்
ஒம்/-
இடம்: மும்பை
நாள்: 17.11.2022
U.பாலசுந்தரராவ்
நிறுவனச் செயலர்

ஸ்ரீ | சுந்தரம் ஹோம்
பதிவு அலுவலகம் : எண். 21, பட்டுலோஸ் சாலை சென்னை – 600 002
கார்ப்பரேட் அலுவலகம் : 46, ஒயிட்ஸ் சாலை, சென்னை – 600 014 தொலைபேசி - 044 2851 5267
கிளை அலுவலகம் : எண். 184 / 9B / 6, பாளையங்கோட்டை சாலை மேற்கு, (V V D ஆயில் மில் எதிரில்) தூத்துக்குடி - 628 008 தொலைபேசி - 0461 – 232 8827

விற்பனை அறிவிப்பு

இப்பவும், பிணைச்சொத்து பாதுகாப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் **2002** ன் கீழான சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்பு "சுந்தரம் **BNP** பரிபாஸ் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்" என அறியப்படும்) ன் அதிகாரப்பூர்வ அலுவலராகவும், மேற்சொன்ன சட்டம் பிரிவு **13(12)** உடன் படிக்க பிரிவு **13(2)**'' ன் படியும், தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், கடன்தாரருக்கு கோரிக்கை அறிவிப்பு மூலம் அழைப்பு விடுத்து, அதில் குறிப்பிட்டுள்ள தொகையை கோரிக்கை அறிவிப்பு தேதியிலிருந்து **60** நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தக் கோரினார். கடன்தாரர் மற்றும் கூட்டுகடன்தாரர்கள் ஆகியோர் உரிய காலக்கெடுவுக்குள் தொகையை செலுத்தாததால், அதிகாரப்பூர்வ அலுவலர், இதன் கீழ்க்கண்ட சொத்து விபரத்தில் கண்டுள்ள சொத்துக்களை, பிரிவு **13(4)** உடன் படிக்க மேற்சொன்ன விதிகளினுள் விதி **8** ன் படி வழங்கப்பட்ட தனது அதிகாரத்தினை செயலுறுத்தி சுவாதீனம் எடுத்துள்ளார்.

பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில், பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் **2002**ன் விதி **8 & 9** ன் படி, இதன் கீழ்க்கண்ட பட்டியலில் விவாரிக்கப்பட்டுள்ள சொத்தை "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற நிபந்தனையில், மூடி முத்திரையிட்ட விலைப்புள்ளிகளை பொதுமக்களிடமிருந்து **02.01.2023** மாலை **16.30** மணி வரை வரவேற்பதன் மூலம் விற்பனை செய்யப்படுகின்றது. ஏல விற்பனையில் பங்கேற்க வேண்டுவோர் தங்களது விலைக்குறியீட்டை மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு, ஒப்புக்கைச் சீட்டுடன் கூடிய பதிவு தபாலில் கீழ்க்கையொப்பமிட்ட நபருக்கு **02.01.2023** மாலை **16.30** மணிக்கோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைக்கலாம். **02.01.2023** மாலை **16.30** மணிக்கு பிறகு பெறப்படும் விலைப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். **02.01.2023** மாலை **16.30** மணி வரை ஒப்புக்கைச்சீட்டுடன் கூடிய பதிவு தபாலில் பெறப்பட்ட முத்திரையிட்ட விலைப்புள்ளிகள் **02.01.2023** மாலை **17.00** மணிக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள இடத்தில் திறக்கப்படும். வெற்றி பெற்ற ஏலதாரர் மீதத்தொகையை தகவல் பெற்ற தேதியிலிருந்து **15** நாட்களுக்குள் செலுத்த வேண்டும். விற்பனையானது மேற்சொன்னவாறு மீதித்தொகையை செலுத்தப்பட்ட பிறகே முழுமையடையும்.

கடன்தாரர் & கூட்டுகடன்தாரர் & சட்ட ரீதியிலான வாரிசுகளின் பெயர் மற்றும் முகவரி	அடமானம் செய்து பெற்ற கடன் (ரூ)	அடிப்படை விலை (ரூ)	சொத்துரிமை சரிபார்த்தலுக்கான இடம்
சீத்தா ராமன்.K, (கடன்தாரர்), எண். **201**, டைப் **1**, போர்ட் ட்ரஸ்ட் க்வாட்டர்ஸ், தூத்துக்குடி **628 004** மேலும், தூத்துக்குடி போர்ட் ட்ரஸ்ட், போக்குவரத்து துறை, மண்டலம் **A**, துறைமுகம் எஸ்டேட், தூத்துக்குடி **- 628 004** மேலும், எண். **69 1C1, 1C2**, ப்ளாட் எண். **4**, ராமச்சந்திரபுரம் கிராமம், குமரகிரி பஞ்சாயத்து, தூத்துக்குடி **- 628 004** **மீனா.S**, (கூட்டு கடன்தாரர்) எண். **201**, டைப் **1**, போர்ட் ட்ரஸ்ட் க்வாட்டர்ஸ், தூத்துக்குடி **- 628 004** ராமன் **V,169**, டைப் **III**, பாரதி நகர், தூத்துக்குடி **- 628 004** **ராமர்.V**, (ஜாமீன்தாரர்) தூத்துக்குடி போர்ட் ட்ரஸ்ட், போக்குவரத்து துறை, மண்டலம் **A**, துறைமுகம் எஸ்டேட், தூத்துக்குடி **- 628 004**	**18.11.2022 ம் தேதியின் படி, ரூ. 15,21,290/- (ரூபாய். பதினைந்து இலட்சத்து இருபத்து ஓராயிரத்து இருநூற்று தொண்ணூறு மட்டும்) + வருங்கால வட்டி + இதர சட்டரீதியான செலவுகள் + இதரக்கட்டணங்கள் ஆகியன.**	**ரூ. 1,80,000/- (ரூபாய். ஒரு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்)**	**M/s.** சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்., எண். **184 / 9B / 6**, பாளையங்கோட்டை சாலை மேற்கு, **(V V D** ஆயில் மில் எதிரில்) தூத்துக்குடி **- 628 008**
		டேவணித்தொகை: (ரூபாயில்)	விலைப்புள்ளி திறப்புக்கான இடம்
		அடிப்படை விலையில் 25%	**M/s.** சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்., சுந்தரம் டவர், எண். **23**, **2** வது தளம், கதீட்ரல் கார்டன் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை **– 600 034**
			விலைப்புள்ளி திறப்பு தேதி:
			02.01.2023 @ 17.00

சொத்து விபரம்: தூத்துக்குடி மாவட்டம், குமரகிரி பஞ்சாயத்து, ராமச்சந்திரபுரம் கிராமம், பழைய சர்வே எண். **69/1C**, உட்பிரிவு சர்வே எண். **69/1C1, 69/1C2** ல் அமைந்துள்ள **1092** சதுர அடி பரப்பளவு கொண்ட ப்ளாட் எண். **4** (கிழக்கு பாகம்) என்ற சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். எல்லைகள் சர்வே எண். **69/1A** ல் அமையப்பெற்ற சொத்துக்கு வடக்கு, சாலைக்கு தெற்கு, ப்ளாட் எண். **3** க்கு கிழக்கு, ப்ளாட் எண். **4** பகுதிக்கு மேற்கு. அளவீடுகள் கிழமேல் வடக்கு புறம் **21.625** அடி., கிழமேல் தெற்கு புறம் **21.625** அடி, தென்வடல் கிழக்கு புறம் **50.5** அடி, தென்வடல் மேற்குபுறம் **50.5** அடி., இது தூத்துக்குடி பதிவு மாவட்டம், புதுக்கோட்டை சார் பதிவு வட்ட எல்லைக்குள் அமையப்பெற்று, கிரைய ஆவண எண். **2139/2007** ல் முழுமையாகவும், குறிப்பாகவும் விவரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு : வாங்க விருப்பமுள்ள நபர்கள், ஏலத்தில் பங்கேற்பதற்கு முன்பே அனைத்து ஆவணங்களையும் சரி பார்த்து சொத்துரிமை, சொத்தின் தன்மை மற்றும் நிலை ஆகியவற்றை பொறுத்து, தம்மளவில் திருப்தி ஏற்படுத்திக்கொள்ள வேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட பிறகு, சொத்தின் உரிமை அல்லது தன்மை தொடர்பாக ஏதேனும் விவகாரம் ஏற்பட்டால், தொகை திருப்பி தரப்படமாட்டாது.

திரு. சீத்தாராமன் **K** அவர்களின் கடன் கணக்கு எண். **50005550** - ன் சொத்து விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **www.sundaramhome.in/uploads/files/sale_notice/.pdf** யை தயவு கூர்ந்து பார்வையிடவும். தொடர்பு நபர் திரு சிவபாலன் **- 9787020556**

தேதி: **18.11.2022**
அதிகாரப்பூர்வ அலுவலர்
M/s.சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் - க்காக

CUB
சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் மற்றும் வசூல் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001. மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன்: 0435 - 2432322, ஃபேக்ஸ் : 0435 - 2431746

சொத்து சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்து)

கீழே கையொப்பமிட்டு உள்ள சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், நிர்வாக அலுவலகம் எண் 24-B, காந்தி நகர், கும்பகோணம் 612001 மற்றும் இதர இடங்களில் செயல்பட்டு வரும் கிளை அலுவலகங்களில் ஒன்றான **794, மெயின் ரோடு, கோவில்பட்டி, தூத்துக்குடி-628502, கோவில்பட்டி கிளை** அமலாக்க சட்டத்தின்படி அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் மேற்படி சட்டம் பிரிவு 13 (2) & (12) , மற்றும் அதற்கு தொடர்புடைய 2002 ஆம் ஆண்டு கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க விதி 3-ன் கீழும் தனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, கடன்தாரர்கள் ஆகிய **1. M/s.முருகப்பா கான்ட்ராக்ட்,** எண்.406/6, 5-வது தெரு, இந்திரா காலனி, கோவில்பட்டி-628501. **2.திரு.K . இசக்கிராஜ்,** த/பெ.கருப்பசாமி, எண். 6/406, இந்திரா காலனி, மந்திதோப்பு, கோவில்பட்டி-628501. **3.திரு.M.கருப்பசாமி,** த/பெ.மகாலிங்கம், எண். 6/406, இந்திரா காலனி, மந்திதோப்பு, கோவில்பட்டி-628501. **4.திருமதி.K.மீனா,** க/பெ.M.கருப்பசாமி, எண். 6/406, இந்திரா காலனி, மந்திதோப்பு, கோவில்பட்டி-628501 ஆகியோர்களுக்கு **06.09.2022** தேதியிட்ட கேட்பு அறிவிப்பு அனுப்பியும் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அந்த கேட்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பாக்கி தொகையான **ரூபாய். 30,25,245/- (ரூபாய் முப்பது லட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து இருநூற்று நாற்பத்து ஐந்து மட்டும்)** மற்றும் **06.09.2022** முதல் மேற்கொண்டு மாத இருப்புக்கான வட்டியுடன் திருப்பி செலுத்தி கடனை அடைக்குமாறு கூறியிருந்தார்கள்.

ஆனால், மேலே குறிப்பிடப்பட்ட சட்ட பூர்வ அறிவிப்பு கிடைக்கப் பெற்றும் மேற்படி கடன் பாக்கியை கடன்தாரர்கள் செலுத்த தவறிவிட்ட படியால் கடந்தாரர்களுக்கும் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டப்பிரிவு 13 (4) மற்றும் அதற்கு தொடர்புடைய மேற்படி சட்டம் 8 வது விதியில் வழங்கப்பட்டுள்ள தமது அதிகாரத்தை பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **15.11.2022** அன்று வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரி தனது சுவாதினத்தில் எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, குறிப்பாக மேலே கூறப்பட்டுள்ள கடந்தாரர்களுக்கும் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவதுயாதெனில் கீழே விவரிக்கப்பட்டுள்ள சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ள அடமானத்தில் உள்ள அசையா சொத்துக்கள் தொடர்பாக எந்த ஒரு நபரும் எந்தவிதமான பேரமோ, நடவடிக்கையோ வைத்துக்கொள்ள கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்-க்கு செலுத்த வேண்டிய **14.11.2022** வரையிலான கடன் பாக்கி தொகையான **ரூபாய். 31,00,473/- (ரூபாய் முப்பத்து ஒன்று லட்சத்து நானூற்று எழுபத்து மூன்று மட்டும்)** மற்றும் முழு கடன் தொகையையும் திருப்பி செலுத்தும் வரை **15.11.2022** முதல் மேற்கொண்டு மாத இருப்புக்கான வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

மேற்படி சட்டத்தின் பிரிவு 13(8) ல் உள்ள சொத்துகளை மீட்பதற்கான கால அளவு குறித்த விதிகளை கடந்தாரர்கள் கவனத்தில் கொள்ளவும்.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்து
அட்டவணை A (M.கருப்பசாமி அவர்களுக்கு சொந்தமான சொத்து)

சொத்து விவரம்: தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, மந்திதோப்பு கிராமம், பழைய நத்தம் சர்வே எண்.101/2, தற்போதைய புதிய சர்வே எண்.398/10 இதற்கு உட்பட்ட 0.00.99 ஹெக்டார் அதாவது 2.44 செண்ட் நிலம், இதில் கட்டப்பட்டுள்ள பழைய கதவு எண்.6/608, புதிய கதவு எண்.406/6 மற்றும் 408/6 கொண்ட நிலம், கட்டிடம். **நான்கு எல்லைகள்: வடக்கில்:** முத்துசாமி வீடு **தெற்கில்:** கீழ்மேல் தெரு **கிழக்கில்:** குருசாமி வீடு **மேற்கில்:** பாண்டிய கோனார் நிலம். இந்த நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட கீழ்மேல் வடபுறம் 32.75 அடி, தென்புறம் 31.25 அடி, தென்வடல் இருபுறமும் 32.75 அடி ஆக மொத்தம் 1064.375 சதுரடி அதாவது 99 சதுர மீட்டர் அல்லது 2.44 செண்ட் நிலம்.

தேதி : 15.11.2022
இடம் : கோவில்பட்டி
அதிகாரப்பூர்வ அதிகாரி

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612001, CIN : L65110TN1904PLC001287, போன்: 0435 - 2402322, ஃபேக்ஸ் : 0435 - 2431746, இணையதளம் : www.cityunionbank.com